# மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை
## *நாவன்மைப்போட்டி - 2011*

**போட்டி நடைபெறும் திகதி 12.03.2011 சனிக்கிழமை**
**இடம்: பாடசாலை மண்டபம் நேரம்: காலை 9.30 மணி**

வயது எல்லைகள்

1. 5 வயதிற்குட்பட்டோர் (31.08.2005 இற்குப் பின் பிறந்தோர்) - நிலா நிலா ஓடி வா
2. 5 - 6 வயது (01.09.2004 - 31.08.2005) - பச்சைக் கிளியே வா வா வா
3. 6 - 7 வயது (01.09.2003 - 31.08.2004) - எனது பட்டம்
4. 7 - 8 வயது (01.09.2002 - 31.08.2003) - புன்னகை
5. 8 - 9 வயது (01.09.2001 - 31.08.2002) - கல்வி
6. 9 - 10 வயது (01.09.2000 - 31.08.2001) - சோம்பல்
7. 10 - 12 வயது (01.09.1998 - 31.08.2000) - வாசித்தல்
8. 12 - 14 வயது (01.09.1996 - 31.08.1998) - வாய்மையின் சிறப்பு
9. 14 - 16 வயது (01.09.1994 - 31.08.1996) - ஒழுக்க நெறியில் விளையாட்டுக்களின் பங்கு
10. 16 + (01.09.1994 இற்கு முன் பிறந்தோர்) - பண்புடையோர் நட்பு
11. பெற்றோர் - தரப்படும் தலையங்கத்தில் 5 நிடங்கள் பேசவேண்டும்.

நிபந்தனைகள்:-

1. மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கு கொள்ளலாம்.
2. மாணவர்கள் சரியான வயதெல்லைப் பிரிவில் பங்கு கொள்ள வேண்டும்.
3. பங்கு பற்றும் மாணவர்கள் கொடுக்கப்படுபனவற்றில் குறைந்தது 50 வீதமாவது கூறினால்தான் அவர்களுக்கு ஊக்குவிக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.
4. முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழாவின்போது பரிசில்கள் வழங்கப்படும்.
5. இப்போட்டியில் பெறும் புள்ளிகள், வருட முடிவில் சிறந்த மாணவரைத் தேர்தெடுப்பதற்கான தேர்வில் சேர்த்துக் கொள்ளப்படும்.
6. போட்டிகள் காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகும்.
7. கீழே குறிப்பிட்டுள்ளபடியே புள்ளிகள் வழங்கப்படும்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
9. மாணவர்கள் தங்கள் பெயர்களை 05.03.2011 சனிக்கிழமைக்கு முன்பு தலைமை ஆசிரியரிடம் கொடுக்கவேண்டும்.
10. இவ்வருடம் இப்போட்டிகளில் பெற்றோர்களும் பங்குபற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் பரிசில்கள் உண்டு. பெற்றோர் கொடுக்கப்படும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைப் பற்றிப்பேசவேண்டும். அத்துடன் அவர்களுடைய பிள்ளைகளில் இல்லத்திற்கு புள்ளிகள் வழங்கி அதிக புள்ளிகள் பெறும் இல்லத்திற்கு பரிசளிப்பு விழாவில் வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.
11. மேலதிக உதவிகளை தலைமை ஆசிரியரிடம் அல்லது ஆளுநர்சபையினரிடம் பெற்றுக்கொள்ளலாம்..

நன்றி
தலைமை ஆசிரியர்

போட்டி நடைபெறும் திகதி 12.03.2011

## நிலா நிலா ஓடி வா

5 வயதிற்குட்பட்டோர் (31.08.2005 இற்குப் பின் பிறந்தோர்)

எல்லோருக்கும் வணக்கம்.
நான் இன்று நிலாப் பாட்டு பாடப்போகிறேன்.

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மீது ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டு வா

வட்ட வட்ட நிலாவே
வண்ண முகில்ப் பூவே
பட்டம் போல பறந்து வா
பம்பரம் போல் சுற்றி வா

## பச்சைக் கிளியே வா வா வா

5 - 6 வயது (01.09.2004 - 31.08.2005)

எல்லோருக்கும் வணக்கம்.
நான் இன்று உங்களுக்கு பச்சைக்கிளியே வா வா வா என்ற பாட்டைப் பாடிக் காட்டப் போகிறேன்.

பச்சைக் கிளியே வா வா வா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா

பையப் பையப் பறந்து வா
பாடிப் பாடிக் களித்து வா
கையில் வந்திருக்க வா
கனியருந்த ஓடி வா.

வட்டமா உன் கழுத்திலே
வான வில்லை ஆரமாய்
இட்ட மன்னன் யாரம்மா
யாம் அறியக் கூறம்மா.

நன்றி

வணக்கம்.

| போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள் | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| வெளிப்பாடு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | - | 10 |

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை
*நாவன்மைப்போட்டி - 2011*

போட்டி நடைபெறும் திகதி 12.03.2011

## எனது பட்டம்

6 – 7 வயது (01.09.2003 – 31.08.2004)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.

கோடை காலத்தில் நல்ல வெய்யில் எறிக்கும். நல்ல காற்றும் வீசும்.

அப்போது பட்டம் விட்டு விளையாடி இருக்கிறீர்களா?

இல்லாவிட்டடால் ஒருமுறை பட்டம் பறக்கவிட்டுப் பாருங்கள்.

பட்டத்தைச் செய்து நூலிலே கட்டிப் பறக்க விடும்போது நாமும் பறப்பதுபோல சந்தோசமாக இருக்கும்.

காற்று சுழன்று வீசும்போது, பட்டமும் துள்ளிக் குதித்துக் குட்டிக்கரணம் போடும்.

நாங்கள் கைகளைத் தட்டி உற்சாகம் கொடுத்தால் அது மீண்டும் குட்டிக் கரணம் போட்டுக் காட்டும்.

பார்ப்பதற்கு மிகவும் சந்தோசமாக இருக்கும்.

எல்லோரும் பட்டம் விட்டு விளையாடலாம்.

அப்படி நானும் பட்டம் விட்டு விளையாடி இருக்கிறேன்.

பட்டம் பறக்கும்போது பல வர்ண சட்டை போட்ட நண்பன் பக்கத்திலே கை கோர்த்து நிற்பது போல இருந்தது.

நீங்களும் செய்து பாருங்கள் உங்களுக்கும் அப்படித்தான் இருக்கும்.

நீங்களும் என்னைப்போல் பலருக்குச் சொல்லி மகிழ்வீர்கள் என்று கூறி எனது பேச்சை நிறைவு செய்கிறேன்.

நன்றி

வணக்கம்.

திருமதி ராதாமணி நிறீதரன்

போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள்

| | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| வெளிப்பாடு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | - | 10 |

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை

*நாவன்மைப்போட்டி - 2011*

<u>போட்டி நடைபெறும் திகதி 12.03.2011</u>

## <u>புன்னகை</u>

7 - 8 வயது (01.09.2002 - 31.08.2003)

இங்கு கூடியிருக்கும் எல்லோர் முன்னால் நான் பேச இருப்பது புன்னகை.
புன்னகை என்ற சொல் மிகவும் அழகானது.
புன்னகை என்றால் புன்சிரிப்பு என்றும் பொருள்படும்.
புன்னகை இறைவன் மனிதர்களுக்குக் கொடுத்த கொடைகளில் ஒன்று.
புன்னகை பூப்பது மனித முகங்களில் மட்டும்தான்.
புன்னகை பூத்த முகமலர்ச்சி உடையவர்கள் புனிதர்களாக மதிக்கப்படுகின்றார்கள்.

"புன்னகை பூத்த முகமென்பர்
பூங்குழல் அழகென்பர்
எண்ணிலா எழில் கொஞ்சும் முகமென்பர்"

எனக் கவி வரிகள் எழுதலாம்.
ஒரு தாய் தனது மழலையின் புன்னகையைக் கண்டு தானும் புன்னகைப்பார்.
தினமும் காலையில் புன்னகை பூத்த ஒரு முகத்தைக் கண்டால் அன்று முழுவதும் மகிழ்வாக இருக்கும் என்று அப்பா கூறுவார்.
கடின உழைப்பு உள்ளவர்களுக்கு மற்றவரது புன்னகை ஓர் அருமருந்தாகும்.
இலவசமாகக் கிடைக்கும் இதனை ஏன் நாம் எப்போதும் அள்ளி வீசக் கூடாது?

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அ∴துஒப்பது இல்" என்பது திருக்குறள்.

ஒருவருக்குத் துன்பம் வரும்போது அத்துன்பத்தை எதிர்க்க வலிமை உடையது சிரிப்புத்தான் எனபது அதன் பொருள்.

எனவே நாம் எப்போதும் புன்னகை பூத்த முகத்தோடு இருப்போம் எனக்கூறி எனது உரையை நிறைவுசெய்கிறேன்.

நன்றி
வணக்கம்

கந்தசாமி சிறீராமசோதி

<u>போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள்</u>

| | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| வெளிப்பாடு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | - | 10 |

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை
*நாவன்மைப்போட்டி - 2011*

போட்டி நடைபெறும் திகதி 12.03.2011

## கல்வி

8 - 9 வயது (01.09.2001 - 31.08.2002)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று உங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட விடயம் கல்வி.

ஒரு மனிதனை முழு மனிதனாக வழி காட்டுவது கல்வி.
கல்வி கற்றால் அறிவு வளரும். அதற்கு நாம்தான் முயற்சி செய்யவேண்டும்.
முயற்சி இல்லாதுவிட்டால் நாம் முன்னேற முடியாது.
தானாக முயன்று கற்பதும், பிறர் கூறக் கேட்பதும், அனுபவத்தினூடாகப் பெற்றுக் கொள்வதுமான அறிவுத்திறன் அனைத்துமே கல்விதான்.

நீரால், காற்றால், தீயால், கள்வரால், அழிக்க முடியாத பெருஞ்செல்வம் கல்விச் செல்வம். கல்வியறிவு உடையவர்களே கண்ணுடையவர், மற்றவர்கள் கண்ணிருந்தும் இல்லாதவர்களே என்று திருவள்ளுவர் கூறுகிறார்..

நாம் நல்ல அழகான ஆடைகளை அணியலாம், அணிகலன்களால் எம்மை அழகுபடுத்தலாம் அவையெல்லாம் அழகென்று கூறமுடியாது. ஒருவருக்கு என்றும் நிரந்தரமான அழகு கல்வியழகு ஒன்றுதான்.

கல்வியைக் கற்கும்போது அது கசக்கும். ஆனால் கற்ற பின் அது இனிக்கும் என்று ஔவையார் கூறியிருக்கிறார்.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. இதனையும் நாம் ஒருபோதும் மறவாது இருக்கவேண்டும்.

கல்வி கற்பதற்கு ஏற்ற காலம் மாணவப் பருவமே. இந்தக் காலத்தில் நாம் ஆசிரியர் சொற்படி நடந்து, ஆர்வத்துடன் கல்வி கற்று, நாட்டில் நல்ல பிள்ளைகளாக வாழ்வோம்.

எனது பேச்சைக் கேட்ட உங்கள் எல்லோருக்கும் எனது அன்பான நன்றி.

வணக்கம்.

- திருமதி சிவனேஸ் பிறேமகுமார்
ஆசிரியர்

போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள்

| | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| வெளிப்பாடு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | - | 10 |

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை
*நாவன்மைப்போட்டி - 2011*

போட்டி நடைபெறும் திகதி 12.03.2011

## சோம்பல்

9 - 10 வயது (01.09.2000 - 31.08.2001)

நான் இன்று உங்கள் முன் பேச எடுத்துக்கொண்ட விடயம் சோம்பல்.

நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் சோம்பலை உடைக்க வேண்டும். நம்மைத் தடுக்கும் எதையும் மீற வேண்டுமானால், வெற்றி பெற வேண்டுமானால், நாம் உழைப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

ஆனால் சோம்பல் என்பது யாருடைய வாழ்க்கையில் புகுந்தாலும் அதன்பின்னர் தோல்வியும், பிரச்சனைகளும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். இதை உடைத்தெறிந்து வாழ்க்கையை மீட்டு எடுக்க வேண்டியது மிக முக்கியம். இதனால்தான் சோம்பலை உடைக்க வேண்டும் என்று கூறினேன்.

“ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா” என்றும்

“சோம்பல் மிகக் கெடுதி பாப்பா, தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா”

என்றும் பாடினார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

நாம் எதையாவது மதித்தால், அது நம் கை வரப்பட்டால், அதனால் பல நன்மைகளும் இலாபங்களும் மகிழ்ச்சியும் நிச்சயம் உண்டு என்றால், அதனைப் பெறுவதற்கு நாம் முயற்சி எடுப்போம். நமது வாழ்க்கையில் நல்ல எதிர்காலம், மனத்திருப்தி, மகிழ்ச்சி இவைகளைவிட மதிப்புக்கு உரியது வேறு என்ன இருக்க முடியும்?

இவை எல்லாம் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் சோம்பலை ஒழித்துக் கட்டுவது மிக முக்கியமானது. ஆகவே நாம் எல்லோரும் தேவைப்பட்டால் பெரு முயற்சி எடுத்து சோம்பல் என்ற விலங்கை உடைத்து வெளியே வருவோம்.

“இன்று செய்ய முடிந்ததை ஒருபோதும் தள்ளிப் போடாதே” இது ஒரு பொன்மொழி.
எனவே சோம்பலை ஒழித்து வெற்றிகரமாக பாதையில் பயணிப்போம்.

என் பேச்சைக் கேட்ட அனைவருக்கும் எனது நன்றி.
வணக்கம்.

- திரு.மு.து.செல்வராஜா

போட்டி மதிப்பீட்டுப் புள்ளிகள்

| | | |
|---|---|---|
| மனனம் | - | 30 |
| உச்சரிப்பு | - | 25 |
| வெளிப்பாடு | - | 25 |
| தொனி | - | 10 |
| பொருத்தமான உடல் அசைவு | - | 10 |

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை

*நாவன்மைப்போட்டி - 2011*

<u>போட்டி நடைபெறும் திகதி 12.03.2011</u>

## <u>வாசித்தல்</u>

10 – 12 வயது (01.09.1998 - 31.08.2000)

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.
நான் இன்று உங்கள் முன் வாசித்தல் என்பது பற்றி உங்கள் முன் பேச வந்துள்ளேன்.

"வாசிப்பதால் மனிதர்கள் பூரணமடைகின்றனர்"

வாசித்தல் என்பது சுவாசித்தல் போன்று இன்றியமையாத ஒன்று. ஒரு மொழியின் தேர்ச்சி அதன் வாசிப்பு அனுபவத்தில் தங்கியிருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆதிகாலத்தில் மனிதர்கள் செவி வழியாகவே தனது அறிவைப் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் எழுத்தாணியும், ஓலையும் வைத்து எழுத கற்றுக்கொண்டார்கள். இதனூடாக தமது அறிவையும், சிந்தனைகளையும் அடுத்தடுத்த பரம்பரைகளுக்கு தருவதற்கத் தயாராகிக் கொண்டார்கள்.

வரலாற்றுக் காலங்களில் ஓலைச் சுவடிகளை ஒரு குறிப்டபிட்ட வகுப்பினர் வாசிக்கத் தொடங்கினர். இவ்வாறு சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஜரோப்பியர் காலம் என்று வாசிப்பு பரிணாம வளர்ச்சி அடைந்தது. இதன் உச்சக்கட்டமான ஜரோப்பியர் காலத்திலேயே அச்சுப்பதிப்பு முறை எமது தாயகங்களுள் புகுந்து கொண்டது.

எமது ஈழமண் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பண்டைய தமிழ் சரித்திர, இலக்கிய நூல்கள் செல்லரித்துப் போவது கண்டு கலங்கினார். அவரின் முயற்சியால் எமது நூல்கள் வாசிக்க இலகுவான புத்தக வடிவம் பெற்றன. வாசிப்பதில் ஒரு புரட்சியும் ஏற்பட்டது. மக்கள் தமது சமய விடயங்கள் மட்டுமன்றி சகல விடயங்களையும் வாசிக்கத் தொடங்கினர். இதனால் சரித்திர, சமுதாய, இலக்கிய, அரசியல் போன்ற பல துறைகள் வளர்ந்ததோடு மக்களின் அறிவும் வளர்ந்தது. "கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்" என்பது பழமொழி இதனைப் பறைசாற்றுகிறது.

அமெரிக்க சனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தெரு விளக்கில் படித்து தேசியத் தலைவர் ஆனார். அவரது கல்வி வாசிப்பதால் ஏற்பட்ட அறிவேயாகும்.

இன்றைய நவீன காலத்தில் இணையத் தளங்கள் ஊடாக எத்தனையோ நூல்களை கண நேரத்தில் கண்முன்னே கொண்டுவரலாம். எல்லாம் இப்போது இலகுவாகிப்போய்விட்டன. இவற்றை நாம் வாசிப்போமானால் எமது அறிவு பெருகும், எமது எதிர்காலம் சிறக்கும். ஆகவே வாசிப்போம், அறிவை வளர்ப்போம், பூரண மனிதர்களாக வாழ்வோம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி
வணக்கம்.

க.பிறேம்சங்கர்
ஆசிரியர்

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை

*நாவன்மைப்போட்டி – 2011*

<u>போட்டி நடைபெறும் திகதி 12.03.2011</u>

## <u>வாய்மையின் சிறப்பு</u>

12 – 14 வயது (01.09.1996 - 31.08.1998)

எல்லோருக்கும் எனது அன்பான வணக்கம். வாய்மையின் சிறப்பு.

இவ்வுலகிலே மனிதராய்ப் பிறப்பதற்கு நாம் எல்லோரும் பெரிய தவம் செய்திருக்க வேண்டும். அதுவும் கூன், குருடு, செவிடு முதலிய குறைகள் இல்லாமல் பிறப்பது பெரும் பாக்கியமாகும்.

> 'அரிது அரிது மானிடராதல் அரிது,
> மானிடராய்ப் பிறந்த காலையும்,
> கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது'
> என்று ஒளவைப் பாட்டி மிக அழகாகக் கூறுகின்றார்.

இவ்வாறு அரிதாகப் பெற்ற மனிதப் பிறவியிலே நாம் சில நெறிகளைக் கைப்பிடித்து வாழவேண்டும். உண்மை பேசுதல், அன்புடமை, ஒழுக்கம் உடமை என்பன அவற்றுள் சிலவாகும். உண்மை பேசுதல் என்பதையே வாய்மை என்கின்றோம்.

எந்த நிலையிலும் உண்மையே பேசிய அரிச்சந்திரன் என்ற மகாமன்னன் கதையை நாம் மறந்துவிட முடியுமா? நாட்டை இழந்தான்: மனைவி மக்களைப் பிரிந்தான்: இழிதொழில் புரியும் நிலைமைக்கு ஆளானான். ஆனால், ஒருபோதுமே வாய்மை தவறியது கிடையாது அதனால்தான் ஆயிரமாயிரம் ஆண்டுகளின் பின்னரும் அவன் புகழ் நிலைத்து நிற்கின்றது.

ஒரு பொய் பேசினால் அதனை மறைக்க ஒன்பது பொய்கள் சொல்ல வேண்டும் என்று சொல்வார்கள். நாம் எப்போதும் உண்மையைப் பேசினால் யாருக்குமே பயப்படத்தேவையில்லை.

இவ்வாறாயின், ஒருவன் பொய்யே பேசக்கூடாதா? பொய்மையைக் கூறுவதால் அழிவில்லாத பெருநன்மை பிறருக்கு விளைகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம் பொய் கூறலாம். அதனை

> 'பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்'
> என்கிறது திருக்குறள்.

தவறாது வாய்மையைக் கடைப்பிடிக்கும் ஒரு மனிதன் அதி அற்புத வல்லமைகளை அடைகிறான். சரித்திரம் மறக்க முடியாத சாதனைகளைப் புரிகிறான். மகாத்மா காந்தியின் வாழ்க்கைச் சரித்திரம் இதற்கு ஓர் அழகிய எடுத்துக் காட்டாகும். எந்நிலையிலும் தவறாது வாய்மையைக் கடைப்பிடித்த காந்தி அடிகள், பிரித்தானிய சாம்ராஜ்யத்தையே வெற்றி கொண்டாரல்லவா?

மற்றைய நெறிகள் யாவற்றிற்கும் உண்மை பேசுதலே அடிப்படை நெறியாகும். இந்த வாய்மை நெறியைத் தவறாது கடைப்பிடித்து நமது வாழ்வில் எல்லாச் சிறப்புகளையும் எய்த வேண்டும் என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

நன்றி
வணக்கம்.

எழுதியவர்: திரு.க.சிவானந்தன்

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை
*நாவன்மைப்போட்டி - 2011*

போட்டி நடைபெறும் திகதி 12.03.2011

## ஒழுக்க நெறியில் விளையாட்டுக்களின் பங்கு

14 – 16 வயது (01.09.1994 - 31.08.1996)

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

நான் இங்கு பேச எடுத்துக்கொண்ட விடயம் ஒழுக்க நெறியில் விளையாட்டுக்களின் பங்கு ஆகும்.

மனிதர்களுக்கென பல கட்டுப்பாடுகளும், ஒழுக்க நெறிகளும் உள்ளன. இவையே மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. இவ்வாறான ஒழுக்க நெறிகளை மனிதர்களிடையே அறிவுறுத்தவும், மேம்படுத்தவும் விளையாட்டுக்கள் சிறந்த ஊடகமாக அமைகின்றன.

முதலில் பாடசாலைகளில் நடைபெறும் இல்லங்களுக்கான விளையாட்டுப்போட்டிகளை ஆராயலாம். அங்கு ஒவ்வொரு இல்ல அங்கத்தவர்களும் தம் இல்லத் தலைவர்களின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். இது பிற்காலத்தில் அவர்கள் வேலை செய்யும்போது வேலைத் தலங்களில் மேலதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தன்மையை உருவாக்கும்.

ஒரு போட்டியாளன் அநேகமாக மூன்று விளையாட்டுகளுக்குக் கூடுதலாக பங்குபற்றக் கூடாது. என்ற விதி உண்டு. இது மற்றையவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் மனப்பான்மையினையும், தாராள குணத்தையும் போட்டியாளன் உள்ளத்தில் வளர்த்திட உதவும்.

மேலும் ஓட்டப்பந்தயங்களின்போது தடம் மாறாமல் ஓடுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது "நீ உன் வாழ்க்கைப் பாதையில் நேராகச் செல்லவேண்டும், குறுக்கு வழிகளில் செல்லக்கூடாது" என போட்டியாளருக்கு சொல்லாமல் சொல்கிறது.

அத்துடன் மூன்று முறைகளுக்குமேல் தவறிழைத்தால் போட்டியாளர் வெளியேற்றப்படுவார். இதன்மூலம் எந்த ஒரு தவறிற்கும் மன்னிப்பு உண்டு ஆனால் அதனைத் திருத்திக்கொள்ளாவிடின் தண்டனை நிச்சயம் என்ற சீரிய கொள்கை மனித உள்ளத்தில் விதைக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் விளையாட்டுப்போட்டிகளில் மிகுந்த ஒழுக்க நெறிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அதிலொன்று விளையாட்டு வீரர்கள் போதை மருந்துகள் பாவிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. பஞ்சமா பாதகங்களில் ஒன்று "போதை". என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக ஒழுக்க நெறிகளை வலியுறுத்துவதில் விளையாட்டுக்களின் பங்கு அளப்பரியது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆகவே விளையாட்டுகளில் பங்கேற்று, எமது ஒழுக்க நெறிகளையும், உடற் பலத்தினையும் மேலும் மேன்மைப்படுத்தி எம் சமூகத்திற்கு பெருமை சேர்த்திடுவோம் என்று கூறி என் பேச்சை இத்துடன் நிறைவு செய்துகொள்கிறேன்.

இதுவரை என் பேச்சைக்கேட்ட உங்கள் அனைவருக்கும் எனது நன்றி, வணக்கம்.

திருமதி ரேவதி ரவிநேரு.

மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை
*நாவன்மைப்போட்டி - 2011*

போட்டி நடைபெறும் திகதி 12.03.2011

## பண்புடையோர் நட்பு

16 + (01.09.1994 இற்கு முன் பிறந்தோர்)

நல்லாரைக் காண்பதும் நன்றே நலம் மிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே! நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே! நல்லாரோடு இணைந்து வாழ்வதுவும் நன்றே! என்பது ஆன்றோர் வாக்கு.

நல்லவர்களைக் காண்பது மனதிற்கு மகிழ்ச்சி தரும். நல்லவர்களோடு கூடி வாழ்தல் வாழ்வுக்கு உயர்ச்சி தரும். ஒழுக்கமும் பண்பும், உண்மையும் அறிவும், நல்ல பழக்கத்தை உருவாக்கும் படிக்கற்களாகும்.

எல்லோரிடத்திலும் அன்பாகப்பேசு, எளிமையும் இரக்கமும் மனத்திலே கொள்ளு! தீயவற்றைப் பேசாதே! தீயவற்றைப் பாராதே! தீயவற்றை கேளாதே உண்மைபேசி உத்தமனாய் வாழ் என்ற உயர்ந்த பண்பாளர்கள் நட்பினால்தான் நாம் உயர்ந்து வாழமுடிகின்றது.

பதறாத காரியம் சிதறாது அவ்வாறே பண்பட்டோர் உள்ளம் புண்படாது. உலகத்திலே பக்குவம் இல்லாதவர்கள் அதைச் செய்வோமா? இதைச்செய்வோமா? என்று தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி விடுவார்கள். நாட்டிற்கு நன்மை செய்யப்பிறந்த நாம் நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் வாழவேண்டும்.

ஒழுக்கமும் பண்பாடும், உயர்வான சிந்தனையும் இழுக்கற்ற அறவாழ்வின் இறைவழியின் தேடல்களும் மனித மனங்களைப் பண்படுத்திச் செல்கின்றன. அடுத்தவன் வாழ்வைப்புரிந்து கொள்ளுவதும் அவலத்தின்போது உதவிக்கரம் நீட்டுவதும் புனிதவாழ்வுக்குப் புதையலாகிறது. மற்றவர்கள் வாழ்வுக்காக! மனிதகுல மேன்மைக்காக! விட்டுக் கொடுப்பதும் ஆன்மீக விடுதலைக்கு உழைப்பதும் இவர்களின் பண்பான குணமாகும்.

உயர்ந்தோர் மாட்டே உலகம் என்பதால்! யாதும் ஊரே! யாவரும் கேளிர்! உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதோர்! உறுதியையும் இலட்சியத்தையும் உயிராகப்போற்றுவோர்! வாக்கோடு வாழ்வையும் நோக்கோடு வெற்றியையும் ஆக்குதிறன்கொண்டு அகிலத்தைப் படைக்க, பண்புடையோர் படைப்புக்களும் பகுத்தறிவு வழிகாட்டல்களும் புண்படாத வாழ்வைக் கட்டியெழுப்புகின்றது.

இராமாயணத்து இராமனும், மகாபாரதத்தின் தருமனும், சத்தியம் தவறாத அரிச்சந்திரனும் மானிடவாழ்வைச் செம்மைப்படுத்துகின்றனர். புராணங்களும் இதிகாசங்களும் வரலாறுகளும் இலக்கியங்களும் வாழும் வழிகளுக்குப் படிக்கற்களாகின்றன. உண்மையொளி காட்டி, உயர்ந்த வழிகாட்டி செம்மையும் செழுமையும் இம்மையின் வழிகளாய் உலகிற்களித்தவர்கள் உயர்ந்தவர்களே!

அன்போடு அறமும், பண்போடு பழக்கமும் எதையும் தாங்கும் இதயமும் கொண்ட இரும்பு மனிதர்களின் உறுதியான வழி காட்டல்களோடு நாமும் வல்லவர்களாக நல்லவர்களாக வாழ பண்புடையோர் நட்புகள் பாலமாக அமையும் என்று கூறி உங்களிடமிருந்து விடை பெறுகின்றேன்.

அ.வேணுகோபாலன்
ஆசிரியர்